
# அவரை அறிகிற அறிவினாலே

**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன் (2 தீமோ 1:12)**




வேதாகமத்தில் **2 பேதுரு** புத்தகம் முழுதும் பிதாவாகிய தேவனையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவினாலே ஒரு தேவபிள்ளை பெற்றுக் கொள்ளகூடிய ஆசிர்வாதங்களை விளக்குகிறது. அதனை நாம் பின்வருமாறு தியானிப்போம்.

**2 பேதுரு 1:2-11** வசனங்கள் கூறுகிறது **"தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள்**

**விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்”.**

மேற்கண்ட வசனங்களில் **வசனம் 2** கூறுகிறது அவரை அறிகிற அறிவினால் நமக்கு கிருபையும், சமாதானமும் பெருகுகிறது என்று. மேலும் **வசனம 3** கூறுகிறது, தேவபக்தியான வாழ்க்கைக்கு தேவையான யாவற்றையும், இவ்வுலக வாழ்க்கைக்கு தேவையான யாவற்றையும் அவரை அறிகிற அறிவினாலே நாம் பெற்றுக் கொள்கிறோம் என்று. அதுமாத்திரமல்ல **வசனம் 4** கூறுகிறதுபோல உலகத்தில் உள்ள பொல்லாத காரியங்களுக்கும், செயல்களுக்கும் தப்பி, திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவரகளாகும் பொருட்டு அருமையான் வாக்குத்தத்தங்களும் அவரை அறிகிற அறிவினாலே நமக்கு கொடுக்கப்படுகிறது.

அவரை அறிகிற அறிவினால் மேற்கூறப்பட்டுள்ள அருமையான காரியங்களை நாம் பெற்றுக்கொள்ளும் பொழுது, அதனால் நம் வாழ்க்கையில் கீழ்காணும் கனிகளை உடையவர்களாய் மாறுவோம். (1) விசுவாசம் (2) தைரியம் (3) ஞானம் (4) இச்சையடக்கம் (5) பொறுமை (6) தேவ பக்தி (7) சகோதர சிநேகம் (8) அன்பு. **வசனம் 8** கூறுகிறபடி, இவ்வகை சுபாவங்கள் நமக்குள் பெருகினால், அதுவே நாம் அவரை அறிகிற அறிவில் விருத்தியடைந்துள்ளோம் என்பதற்கு சாட்சியாகும். **வசனம் 9** கூறுகிறபடி, மேற்கண்ட காரியத்தில் ஒருவன் குறைவுபடும் பொழுது ஒருவன் தான் தேவனால் சுத்திகரிக்கப்பட்டவன் (இரட்சிக்கப்பட்டவன்) என்பதையே மறந்து, கண் சொருகிப்போன குருடனை போலாகிறான். எனவே நாம் ஜாக்கிரதையாய் வாழும் பட்சத்தில், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய

ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும் **(வசனம் 10,11)**.

மேலும் **2 பேதுரு 2:20-22** வசனங்கள் கூறுகிறது **"கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது".**

மேற்க்கண்ட வசனங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளும் சத்தியம் என்னவென்றால், அவரை மனதார அறிந்து உணர்ந்த பிறகும், ஒருவன் பின் வாங்கிப்போனால் அவனுடைய பின்னிலைமை இரட்சிக்கப்படுவதற்கு முன்பிருந்த முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். ஏனெனில் தேனால் நாம் வாழ்க்கையில் பெற்ற ஆசிர்வாதங்கள், அற்புதங்கள் ஆகியவற்றால் உண்டாகிற மாற்றத்தை காட்டிலும், அவரை அறிகிற அறிவினால் உண்டாகிற மாற்றம் மேன்மையானதாகும். அதிலிருந்தும் ஒருவன் பின்வாங்கிபோவானானால் அவனை பிறகு மீட்டெடுப்பது முடியாத காரியமாகும்.

இப்பொழுது நாம் தேவனை அறிகிற அறிவு என்றால் என்ன என்பதை குறித்து தியானிப்போம். நாம் என்று தேவனுடைய வார்த்தையை (சத்தத்தை) கேட்டு இரட்சிக்கப்பட்டோமோ அன்றிலிருந்தே அவரை அறிகிற அறிவு நமக்குள் தோன்ற ஆரம்பிக்கிறது. தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் மூலம் அவரை அறிகிற அறிவில் பெருகுகிறோம். **ரோமர் 10:17** கூறுகிறது **"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்"** என்று. மேலும் தேவனோடு நாம் கொண்டுள்ள ஐக்கியத்தின் மூலம், தனிப்பட்ட உறவின் மூலம் அவரை அறிகிற அறிவில் பெருகுகிறோம்.

அவருடைய சித்தத்தை அறிந்து அதன்படி நம்முடைய வாழ்க்கையை நடத்தும் பொழுது, தேவன் நம்முடைய வாழ்க்கைக்காக வைத்துள்ள திட்டத்தை அறிந்தவர்களாக காணப்படுகிறோம். வேதாகமத்தில் தேவ மனிதர்களான யோசேப்பு, தாவீது, யோபு போன்றோர் தேவனை குறித்த அறிவில் தேறினவர்களாக காணப்பட்டனர். மற்றவர்கள் அவர்களை

புரிந்து கொள்ளாத பொழுதும், அவர்களுடைய வாழ்க்கையில் எதிர்மறையான காரியங்கள் நடந்தபொழுதும், அவர்களோ தேவனை அறிந்திருந்தபடியால் அமைதியாக தங்கள் வாழ்க்கையை தேவனுக்கு அர்பணித்து வாழ்ந்தனர். அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு மிகவும் சம்பூரணமுள்ளதாய் இருந்தது.

பவுல் கூறுகிறார் **"அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12)**. ஆம் நாம் தேவனோடு ஐக்கியமுடையவர்களாய், நம் வாழ்க்கையை அவர் கரத்தில் ஒப்புவித்து, அவருடைய சித்தத்தை அறிந்து, அவரை அறிகிற அறிவில் வளர்ந்து, ஒவ்வொரு நாளும் வாழ்வோமானால் நிச்சயமாகவே மேற்க்கண்ட அனைத்து ஆசிர்வாதங்களையும் இம்மையிலும், மறுமையிலும் பெற்று மகிழ்ச்சியோடு வாழலாம். ஆமென், அல்லேலூயா.